**சுருக்கம்**

ஆட்சி எல்லை – நாமக்கல் மாவட்டம் – நாமக்கல் வட்டத்தைப் பிரித்து புதிய சேந்தமங்கலம் வட்டம் உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் [வ.நி.1(1)] துறை**

**அரசாணை (நிலை) எண்.178** — **நாள்: 20.04.2015**

**படிக்கவும்:**

1. அரசாணை (நிலை) எண்.279, வருவாய்த் துறை, நாள் 9.6.2003.
2. அரசாணை (2டி) எண்.176, வருவாய்த் துறை, நாள் 15.6.2012.
3. மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல் கடித எண்.ந.க. 25492 /2010/ஒ.1 நாள் 24.7.2012.
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், கடித எண்.பணி6(4)/9266/2013, நாள் 01.10.2013 மற்றும் 24.12.2014.

---

**ஆணை :–**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 11.08.14 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–இன் கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

**"நாமக்கல் மாவட்டத்தில் உள்ள நாமக்கல் வட்டத்தை பிரித்து சேந்தமங்கலத்தில் ஒரு புதிய வட்டம் உருவாக்கப்படும்."**

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் தனதறிக்கையில் தற்போதுள்ள நாமக்கல் வட்டத்தில் 10 குறுவட்டங்களும் (கொல்லிமலை நீங்கலாக) 132 வருவாய் கிராமங்களும் உள்ளன என்றும், 5,00,000க்கும் அதிகமான மக்கள் தொகை உள்ளதால் அரசின் நலத்திட்டங்கள் எளிதாக செயல்படுத்த இயலாத சூழல் உள்ளது என்றும், அரசின் நலத்திட்டங்களை எளிதாக செயல்படுத்தவும், தகுதியான பயனாளிகளை சென்றடைவதை உறுதிப்படுத்தவும், நிர்வாக ரீதியான காரணங்களுக்காகவும் புதிய வட்டத்தினை ஏற்படுத்துவது அவசியமாக உள்ளது என்றும் தெரிவித்து நாமக்கல் வட்டத்தினைப் பிரித்து புதியதாக சேந்தமங்கலம் வட்டம் உருவாக்க பரிந்துரை செய்துள்ளார். மேலும் நாமக்கல் வட்டப்பிரிவினைக்குப்பின் நாமக்கல் மற்றும் சேந்தமங்கலம் வட்டங்களில் உள்ள குறுவட்டங்கள் பின்வருமாறு அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

| நாமக்கல் | சேந்தமங்கலம் |
|---|---|
| 1. செல்லப்பம்பட்டி | 1. சேந்தமங்கலம் |
| 2. புதுச்சத்திரம் | 2. காளப்பநாய்க்கன்பட்டி |
| 3. மோகனூர் | 3. அலங்காநத்தம் |
| 4. வலையபட்டி | 4. எருமப்பட்டி |
| 5. நாமக்கல் | 5. மேட்டுப்பட்டி |
| 6. நல்லிபாளையம் | |
| 7. கீரம்பூர் | |

த.பி.பா

3. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து அளவுகோல்களும் பூர்த்தி செய்வதால், நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையினை ஏற்று, நாமக்கல் வட்டத்தைப் பிரித்து புதிய சேந்தமங்கலம் வட்டம் உருவாக்கவும், நாமக்கல் வட்டத்திற்கு உட்பட்ட நல்லிபாளையம் குறுவட்டத்திலுள்ள 12 கிராமங்களை பிரித்து கீரம்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு கீரம்பூர் என்ற ஒரு புதிய குறுவட்டம் உருவாக்கி நாமக்கல் வட்டத்தில் சேர்க்கவும், நாமக்கல் மாவட்டம் மற்றும் வட்டம் எருமைப்பட்டி உள்வட்டத்தைப் பிரித்து புதிய மேட்டுப்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு மேட்டுப்பட்டி என்ற ஒரு புதிய குறுவட்டம் உருவாக்கி சேந்தமங்கலம் வட்டத்தில் சேர்க்கவும் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார். மேலும், புதியதாக உருவாக்கப்படவுள்ள சேந்தமங்கலம் வட்டத்திற்கு 48 பணியிடங்கள் வருவாய்த் துறைக்கும், 10 பணியிடங்கள் நில அளவைத் துறைக்கும் அனுமதிக்குமாறும், மேலும் தொடரும் செலவினமாக ரூ.1,31,72,625/–ம் தொடராச் செலவினமாக ரூ.20,05,000/–ம் அனுமதிக்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்கண்ட சூழ்நிலையில், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரைகளை அரசு நன்கு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

I. நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டத்தினைப் பிரித்து புதிய சேந்தமங்கலம் வட்டம் உருவாக்கப்படுகிறது.

II. நாமக்கல் வட்டத்திற்கு உட்பட்ட நல்லிபாளையம் குறுவட்டத்திலுள்ள 12 கிராமங்களை பிரித்து கீரம்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு கீரம்பூர் என்ற ஒரு புதிய குறுவட்டம் உருவாக்கி நாமக்கல் வட்டத்தில் சேர்க்கப்படுகிறது.

III. நாமக்கல் மாவட்டம் மற்றும் வட்டம் எருமைப்பட்டி உள்வட்டத்தைப் பிரித்து புதிய மேட்டுப்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு மேட்டுப்பட்டி என்ற ஒரு புதிய குறுவட்டம் உருவாக்கி சேந்தமங்கலம் வட்டத்தில் சேர்க்கப்படுகிறது.

IV. புதியதாக உருவாக்கப்படும் சேந்தமங்கலம் வட்டத்திற்கு கீழ்கண்டவாறு மொத்தம் 53 பணியிடங்களும், இதில் 30 பணியிடங்கள் மறுபரவலமர்த்ததல் மூலமும், 23 பணியிடங்கள் புதியதாக உருவாக்கவும் ஒப்புதல் வழங்கப்படுகிறது:–

பொதுப் பிரிவு

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | நாமக்கல் வட்டத்திலுள்ள மொத்த பணியிடங்கள் | நாமக்கல் வட்டத்தில் நிறுத்திவைக்க வேண்டிய பணியிடங்கள் | மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டிய பணியிடங்கள் | புதியதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் | மொத்த பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | வட்டாட்சியர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 2. | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 3. | மண்டல துணை வட்டாட்சியர் | 4 | 2 | 2 | -- | 2 |
| 4. | வருவாய் உதவியாளர் *6 மிகைப்பணியிடங்கள் | 14 | 5 | 3 | -- | 3 |
| 5. | வருவாய் ஆய்வாளர் | 10 | 7 | 3 | 2 | 5 |
| 6. | இளநிலை உதவியாளர் **3 மிகைப்பணியிடங்கள் | 7 | 2 | 2 | -- | 2 |
| 7. | தட்டச்சர் | 2 | 1 | 1 | -- | 1 |
| 8. | பதிவுறு எழுத்தர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 9. | ஒட்டுனர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 10. | அலுவலக உதவியாளர் ***2 மிகைப்பணியிடங்கள் | 18 | 9 | 7 | -- | 7 |
| 11. | இரவுக் காவலர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 12. | மசால்சி | 1 | 1 | -- | 1 | 1 |
| | மொத்தம் | 61 | 32 | 18 | 8 | 26 |

*6 வருவாய் உதவியாளர் பணியிடங்கள் மிகைப்பணியிடமாக உள்ளன. இந்த 6 மிகைப் பணியிடங்களில் தேர்தல் பிரிவு, வட்ட வழங்கல் பிரிவு மற்றும் சிறப்பு திட்ட அமலாக்கம் பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு தலா 1 பணியிடம் வீதம் மறுபரவலமர்த்தல் மூலம் மாற்றம் செய்யப்பட வேண்டும். மீதமுள்ள 3 மிகைப் பணியிடங்கள் தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

** 3 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் மிகைப்பணியிடமாக உள்ளன. இந்த 3 மிகைப் பணியிடங்களில் சமூக பாதுகாப்புத்திட்டம், நாமக்கல் மற்றும் சேந்தமங்கலம் வட்டங்களுக்கு தலா 1 பணியிடமும் மீதமுள்ள 1 பணியிடம் சேந்தமங்கலம் வட்டம், வட்ட வழங்கல் பிரிவிற்கும் மறுபரவலமர்த்தல் மூலம் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

*** 2 அலுவலக உதவியாளர் பணியிடங்கள் மிகைப்பணியிடமாக உள்ளன. இந்த 2 மிகைப் பணியிடங்களில், ஒரு பணியிடம் சமூக பாதுகாப்புத் திட்ட பிரிவிற்கும், ஒரு பணியிடம் வட்ட வழங்கல் பிரிவிற்கும் மறுபரவலமர்த்தல் மூலம் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

த.பி.பா

சமூகபாதுகாப்புத் திட்டம்

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | சிறப்பு வட்டாட்சியர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 2 | வருவாய் உதவியாளர் | 2 | 1 | 1 | -- | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | -- | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 4 | தட்டச்சர் | -- | -- | -- | 1 | 1 |
| 5 | பதிவுறு எழுத்தர் | -- | -- | -- | 1 | 1 |
| 6 | அலுவலக உதவியாளர் | -- | -- | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 7 | ஓட்டுநர் | 1 | 1 | -- | 1 | 1 |
| | மொத்தம் | 4 | 4 | 3 | 4 | 7 |

தேர்தல் பிரிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | துணை வட்டாட்சியர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 2 | உதவியாளர் | 1 | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| | மொத்தம் | 2 | 2 | 1 | 1 | 2 |

வட்ட வழங்கல் பிரிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர் நிலை) | 1 | 1 | -- | 1 | 1 |
| 2 | உதவியாளர் | 1 | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | 1 | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 4 | தனிவருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | 3 | 2 | 1 | -- | 1 |
| 5 | அலுவலக உதவியாளர் | 1 | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| | மொத்தம் | 7 | 6 | 4 | 1 | 5 |

த.பி.பா

சிறப்பு திட்ட அமலாக்கம்

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | துணை வட்டாட்சியர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 2 | உதவியாளர் | 1 | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமைத்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 3 | டேட்டா என்ட்ரி இயக்குபவர் (Data Entry Operator) (தொகுப்பூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.7500/—வீதம்) | -- | -- | -- | 1 | 1 |
| | மொத்தம் | **2** | **2** | **1** | **2** | **3** |

நில அளவை பிரிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | மண்டல துணை ஆய்வாளர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 2 | வட்ட சார் ஆய்வாளர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 3 | முதுநிலை வரைவாளர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 4 | குறுவட்ட அளவர் | 10 | 7 | 3 | 2 | 5 |
| 5 | புலஉதவியாளர் | 1 | 1 | -- | 2 | 2 |
| | மொத்தம் | **14** | **11** | **3** | **7** | **10** |

சேந்தமங்கலம் வட்டத்திற்கான மொத்த பணியிடங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | பொதுப்பிரிவு | 61 | 32 | 18 | 8 | 26 |
| 2 | சமூகப் பாதுகாப்பு திட்டம் | 4 | 4 | 3 | 4 | 7 |
| 3 | தேர்தல் பிரிவு | 2 | 2 | 1 | 1 | 2 |
| 4 | வட்ட வழங்கல் பிரிவு | 7 | 6 | 4 | 1 | 5 |
| 5 | சிறப்பு திட்ட அமலாக்கம் | 2 | 2 | 1 | 2 | 3 |
| 6 | நில அளவை பிரிவு | 14 | 11 | 3 | 7 | 10 |
| | மொத்தம் | 90 | 57 | 30 | 23 | 53 |

நாமக்கல் வட்டத்தில் உள்ள மிகைப்பணியிடங்கள்

| பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|
| உதவியாளர் | 3 |
| மொத்தம் | 3 |

V) புதியதாக உருவாக்கப்படும் சேந்தமங்கலம் வட்டத்திற்கு ஒரு வருடத்திற்கு ஏற்படும் தொடரும் செலவினம் மற்றும் தொடராச் செலவினம் கீழ்கண்டவாறு ஒப்பளிக்கப்படுகிறது.

<u>அ) தொடரும் செலவினம்</u>

| வ. எண் | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் (திருத்திய ஊதிய விகிதப்படி) | 48,97,200 |
| 2 | மின்சார கட்டணம் | 60,000 |
| 3 | எரிபொருள் (டீசல்) | 1,92,000 |
| 4 | தொலைபேசிக் கட்டணம் | 25,500 |
| | மொத்தம் | 51,74,700 |

ஆ) தொடரா செலவினங்கள்

| வ. எண் | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | ஈப்பு | 11,12,000 |
| 2) | பேக்ஸ் | 10,000 |
| 3) | ஜெராக்ஸ் (நகல்) இயந்திரம் பிரிண்டர் | 65,000 |
| 4) | தீயணைப்பான் | 10,000 |
| 5) | குளிர்சாதனம் | 50,000 |
| 6) | கணினி | 1,00,000 |
| 7) | பிரிண்டர் | 25,000 |
| 8) | தொலைபேசி இணைப்பு | 3,000 |
| 9) | தளவாடங்கள் | 6,00,000 |
| | மொத்தம் | 19,75,000 |

VI) தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு பணிக்காலம் ஒரு ஆண்டு முடிவதற்கு முன்பாக பணி இடைவெளி (Break in service) கொடுக்கப்படவேண்டும்.

5. மேலே பத்தி 4(v)-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்க வேண்டும்.

(I) பணியாளர் சம்பளங்கள்

(i) வருவாய் பணியிடங்கள் ரூ.1,000/–

2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு –I. திட்டத்தில் சேராதது –AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2053 00 094 AB 0102)

(ii) நில அளவைப் பணியிடங்கள் ரூ.1,000/–

2029–00 நில வருவாய் – 102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் – I. திட்டத்தில் சேராதது AF நில அளவை பராமரிப்பு பணி – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2029 00 102 AF 0105)

(iii) குடிமைப் பொருள் பணியிடங்கள் ரூ.1,000/–

3456–00 நுகர்பொருள் வழங்கல் – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – I. திட்டத்தில் சேராதது AB மாவட்ட பணியாளரமைப்பு – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 3456 00 001 AB 0108)

(II) 2053–00 மாவட்ட நிருவாகம் – 094 – ஏனைய பணியாளரமைப்பு – I. திட்டத்தில் சேராதது – AB வட்டப் பணியாளரமைப்புகள்

(அ) 05 அலுவலகச் செலவுகள் 01 தொலைப்பேசி கட்டணங்கள் ரூ.29,000/–

தொடரும் செலவினம் ரூ.25,500/– மற்றும் தொடராச் செலவினம் ரூ.3,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 0513)

தபி.பா

(ஆ) <u>05 அலுவலகச் செலவுகள் – 03 மின் கட்டணங்கள் ரூ.60,000/–</u>
(த.தொ.கு 2053 00 094 AB 0531)

(இ) <u>அறைகலன்கள் ரூ.6,00,000/–</u>
05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்
(த.தொ.கு 2053 00 094 AB 0559)

(ஈ) <u>19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் ரூ.1,35,000/–</u>
(த.தொ.கு 2053 00 094 AB 1914)

(உ) <u>21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் ரூ.11,12,000/–</u>
(த.தொ.கு 2053 00 094 AB 2119)

(ஊ) <u>45 பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் ரூ.1,92,000/–</u>
(த.தொ.கு 2053 00 094 AB 4500)

(எ) <u>76 கணினியும் துணை பாகங்களும் – 01 வாங்குதல் ரூ.1,25,000/–</u>
(த.தொ.கு 2053 00 094 AB 7614)

6. மேலே பத்தி 4(v)–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புது துணைப்பணி குறித்த செலவினமாகும் (New Instrument of Services). இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினத்திற்கு தேவைப்படும் நிதி முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதித் (வ.செ.பொது.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து நடப்பு ஆண்டிற்கு தேவைப்படும் நிதியை முன்பணமாக பெறுவதற்கு உரிய படிவத்தில், இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (வ.செ.பொது.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5 கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2014–2015 துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும்பொருட்டு உரிய வரைவு செயற்குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதித் (வருவாய்) துறைக்கு அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வட்டம் 20.4.2015–ஆம் நாள் முதல் செயல்படும்.

8. புதிய சேந்தமங்கலம் வட்டம் உருவாக்குவது குறித்து மேலே பத்தி 4–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

த.பி.பா

9. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.22587/மைமஆபி/2015, நாள் 20.04.2015–இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.54 (ஐம்பத்து நான்கு).

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. வெங்கடேசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 600 079
(அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)
கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5.
கூடுதல் தலைமைச் செயலாளர்//நில நிர்வாக ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர்/நிலச் சீர்திருத்த ஆணையர்,சென்னை–5.
குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர், சென்னை–5.
ஆணையர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–5.
மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல் மாவட்டம், நாமக்கல்.
மாவட்ட கருவூல அலுவலர், நாமக்கல் மாவட்டம், நாமக்கல்
மாநில கணக்காயர் (A&E), சென்னை–18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18. (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
மாநில கணக்காயர் (CAG) சென்னை–9.
மாநில கணக்காயர் (RAO) சென்னை–9.
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை–2.
அனைத்துத் துறை தலைவர்கள் / அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–9.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104.
முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–9.
தலைமை தேர்தல் அதிகாரி, பொது (தேர்தல்கள்) துறை, சென்னை–9.
ஆணையர், கருவூலக்கணக்கு துறை, சென்னை–15.
இயக்குநர், மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகம், இராஜாஜி பவன், பெசன்ட் நகர், சென்னை–90

நகல்:
மாண்புமிகு அமைச்சர் (வருவாய்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர், வருவாய்த்துறை அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
நிதித்(வ.செ.பொது–I/வ.செ.பொது–II/வருவாய்/கக–3/கூஉ(ம)நுபா/பொதுப்பணி-I/மை.மஆபி) துறை, சென்னை–9.
இகோ/உதிரி –2.

இரா. வெங்கடேசன்,
அரசு செயலாளர்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர். 20.4.15.
20/4/15

**அரசாணை (நிலை) எண்.178, வருவாய்த்துறை, நாள் 20.04.2015**

## இணைப்பு

## அறிவிக்கை 1

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள நாமக்கல் வட்டத்தை நாமக்கல், சேந்தமங்கலம் என இரண்டாகப் பிரித்து 2015 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 20–ஆம் நாளிலிருந்து நாமக்கல் நகரைத் தலைமையிடமாகக் கொண்ட நாமக்கல் வட்டமும், புதிதாக தோற்றுவிக்கப்பட்ட சேந்தமங்கலத்தை தலைமையிடமாகக் கொண்ட (புதிய) சேந்தமங்கலம் வட்டத்தையும் ஆட்சி எல்லைகளாக கொண்டு செயல்படும்.

**நாமக்கல் மாவட்டம்**

| வருவாய் கோட்டம் | வட்டம் | ஊராட்சி ஒன்றியம் | | குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|
| நாமக்கல் | நாமக்கல் | 1. | நாமக்கல் (பகுதி) | 1. | நாமக்கல் |
| | | 2. | நாமக்கல் (பகுதி) | 2. | நல்லிபாளையம் |
| | | 3. | நாமக்கல் (பகுதி) | 3. | கீரம்பூர் (புதியதாக உருவாக்கப்பட்டது) |
| | | 4. | மோகனூர் (பகுதி) | 4. | மோகனூர் |
| | | 5. | மோகனூர் (பகுதி) | 5. | வளையப்பட்டி |
| | | 6. | புதுச்சத்திரம் (பகுதி) | 6. | செல்லப்பம்பட்டி |
| | | 7. | புதுச்சத்திரம் (பகுதி) | 7. | புதுச்சத்திரம் |
| நாமக்கல் | சேந்தமங்கலம் | 1. | சேந்தமங்கலம்(பகுதி) எருமப்பட்டி (பகுதி) நாமக்கல் (பகுதி) | 1. | சேந்தமங்கலம் |
| | | 2. | சேந்தமங்கலம்(பகுதி) புதுச்சத்திரம் (பகுதி) | 2. | காளப்பநாயக்கன்பட்டி |
| | | 3. | எருமப்பட்டி (பகுதி) | 3. | எருமப்பட்டி |
| | | 4. | எருமப்பட்டி (பகுதி) | 4. | மேட்டுப்பட்டி (புதியதாக உருவாக்கப்பட்டது) |
| | | 5. | எருமப்பட்டி (பகுதி) | 5. | அலங்காநத்தம் |

**அரசாணை (நிலை) எண்.178, வருவாய்த்துறை, நாள் 20.04.2015**

**அறிவிக்கை 2**

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள நாமக்கல் வட்டத்தைப் பிரித்து 2015 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 20–ஆம் நாளிலிருந்து நாமக்கல் நகரை தலைமையிடமாக கொண்டு நாமக்கல் வட்டம் என்றும் சேந்தமங்கலத்தை தலைமையிடமாக கொண்டு சேந்தமங்கலம் என்றும் ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும். இப்பிரிவினையால் குடிமைப்பணி, குற்றவியல், முறைமன்றங்கள், பதிவுத்துறை மாவட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றிய நிர்வாக அமைப்பில் எவ்வித மாறுதலும் இராது.

2. நாமக்கல் வட்டத்தில் நாமக்கல், நல்லிபாளையம், கீரம்பூர் (புதியதாக உருவாக்கப்பட்டது) மோகனூர், வளையப்பட்டி, செல்லப்பம்பட்டி மற்றும் புதுச்சத்திரம் குறுவட்டங்கள் அடங்கும்.

3. புதிய சேந்தமங்கலம் வட்டத்தில் உள்ளடங்கும் சேந்தமங்கலம், காளப்பநாயக்கன்பட்டி, எருமப்பட்டி, மேட்டுப்பட்டி (புதியதாக உருவாக்கப்பட்டது) மற்றும் அலங்காநத்தம் ஆகிய குறுவட்டங்கள் மீது தற்போது நாமக்கல் வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி சேந்தமங்கலம் வட்டாட்சியரால் 2015 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 20–ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

சேந்தமங்கலம் வட்டம்

| வ.எண். | உள்வட்டத்தின் பெயர் | கிராம எண். | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1. | சேந்தமங்கலம் | 44 | சேந்தமங்கலம் |
| 2. | | 48 | பச்சுடையாம்பட்டி |
| 3. | | 43 | பொட்டணம் |
| 4. | | 49 | கொண்டமநாயக்கன்பட்டி |
| 5. | | 45 | பெரியகுளம் |
| 6. | | 47 | பொம்மசமுத்திரம் |
| 7. | | 47 | அக்கியம்பட்டி |
| 8. | | 46 | பள்ளம்பாறை |
| 9. | | 72 | புதுக்கோம்பை |
| 10. | | 47 | பொன்னார்குளம் பிட் 1,3,4 |
| 11. | | 47 | பொன்னார்குளம் பிட் 2 |
| 12. | | 71 | முத்துகாபட்டி |
| 13. | | 71 | சிதம்பரப்பட்டி |
| 14. | காளப்பநாயக்கன்பட்டி | 31 | பேளுக்குறிச்சி |
| 15. | | 31 | மேலப்பட்டி பிட் 2 |
| 16. | | 30 | பள்ளிப்பட்டி |
| 17. | | 29 | கல்குறிச்சி |
| 18. | | 32 | உத்திரகிடிகாவல் |
| 19. | | 27 | ஈச்சம்பட்டி குரூப் |
| 20. | | 38 | காளப்பநாயக்கன்பட்டி |
| 21. | | 36 | துத்திக்குளம் |
| 22. | | 33 | நடுக்கோம்பை |

| | | | |
|---|---|---|---|
| 23. | | 35 | திருமலைகிரி |
| 24. | | 34 | வாழவந்திக்கோம்பை |
| 25. | | 26 | திருமலைப்பட்டி |
| 26. | | 100 | பவித்திரம் |
| 27. | | 100 | பவித்திரம் புதூர் |
| 28. | | 101 | வரகூர் |
| 29. | | 101 | தேவராயபுரம் |
| 30. | | 102 | வரதராஜபுரம் |
| 31. | எருமப்பட்டி | 103 | முட்டாஞ்செட்டி |
| 32. | | 104 | எருமப்பட்டி |
| 33. | | 96 | பொன்னேரி |
| 34. | | 98 | சிங்களங்கோம்பை |
| 35. | | 99 | தோட்டமுடையாம்பட்டி |
| 36. | | 105 | காவக்காரன்பட்டி |
| 37. | | 95 | கோணங்கிப்பட்டி |
| 38. | | 106 | M.மேட்டுப்பட்டி |
| 39. | | 106 | அக்ரஹார மேட்டுப்பட்டி |
| 40. | | 109 | செவ்வந்திப்பட்டி |
| 41. | மேட்டுப்பட்டி | 108 | வடவத்தூர் |
| 42. | | 107 | அக்ரஹார வாழவந்தி குரூப் |
| 43. | | 95 | M.திப்ரமாதேவி |
| 44. | | 95 | திப்ரமாதேவி அக்ரஹாரம் |
| 45. | | 97 | பொட்டிரெட்டிபட்டி |
| 46. | | 97 | அ.பாலப்பட்டி |
| 47. | | 74 | போடிநாயக்கன்பட்டி |
| 48. | | 75 | S.பழையபாளையம் |
| 49. | | 75 | சிவநாயக்கன்பட்டி |
| 50. | | 75 | அக்ரஹாரபழையபாளையம் |
| 51. | அலங்காநத்தம் | 73 | கெஜகோம்பை |
| 52. | | 94 | புதுக்கோட்டை |
| 53. | | 76 | தூசூர் |
| 54. | | 77 | பெருமாபட்டி மேற்கு |
| 55. | | 76 | பெருமாபட்டி கிழக்கு குரூப் |
| 56. | | 77 | கெஜல்நாய்க்கன்பட்டி |
| 57. | | 77 | பொம்மசமுத்திரம் அக்ரஹாரம் |
| 58. | | 69 | ரெட்டிபட்டி |

**<u>நாமக்கல் வட்டம்</u>**

| வ.எண். | உள்வட்டத்தின் பெயர் | கிராம எண். | கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1. | செல்லப்பம்பட்டி | 38 | செல்லப்பம்பட்டி |
| 2. | | 14 | களங்காணி |
| 3. | | 02 | ஏளூர் |
| 4. | | 39 | தாளம்பாடி |
| 5. | | 07 | தத்தாத்திரிபுரம் குரூப் |

| | | | |
|---|---|---|---|
| 6. | | 10 | காடிபட்டி குரூப் |
| 7. | | 11 | S. உடுப்பம் குரூப் |
| 8. | | 37 | மின்னாம்பள்ளி |
| 9. | | 41 | பாப்பிநாய்க்கன்பட்டி |
| 10. | | 03 | லக்கபுரம் குரூப் |
| 11. | புதுச்சத்திரம் | 21 | A.K. சமுத்திரம் |
| 12. | | 20 | பாச்சல் குரூப் |
| 13. | | 05 | கல்யாணி |
| 14. | | 05 | R. புளியம்பட்டி |
| 15. | | 06 | நவணி |
| 16. | | 25 | கதிராநல்லூர் |
| 17. | | 16 | தாத்தையங்கார்பட்டி |
| 18. | | 17 | கண்ணூர்பட்டி |
| 19. | | 15 | காரைக்குறிச்சி |
| 20. | | 01 | ச.நாட்டாமங்கலம் |
| 21. | | 23 | இராமநாய்க்கன்பட்டி |
| 22. | மோகனூர் | 82 | ஆரியூர் |
| 23. | | 83 | பேட்டப்பாளையம் |
| 24. | | 85 | மோகனூர் |
| 25. | | 84 | ராசிபாளையம் |
| 26. | | 86 | ஒருவந்தூர் |
| 27. | | 87 | குமரிபாளையம் |
| 28. | | 88 | அரசநத்தம் |
| 29. | வலையபட்டி | 92 | வலையபட்டி குரூப் |
| 30. | | 93 | நா.புதுப்பட்டி |
| 31. | | 90 | அரூர் |
| 32. | | 89 | ஆண்டாபுரம் |
| 33. | | 89 | ஆண்டாபுரம் அக்ரஹாரம் |
| 34. | | 91 | பரளி |
| 35. | | 80 | தோளுர் |
| 36. | | 81 | அணியாபுரம் |
| 37. | | 81 | சின்னபெத்தாம்பட்டி |
| 38. | | 79 | லத்துவாடி |
| 39. | நாமக்கல் | 64 | தொட்டிப்பட்டி |
| 40. | | 42 | மரூர்பட்டி |
| 41. | | 42 | ஆவல்நாய்க்கன்பட்டி |
| 42. | | 50 | வீசாணம் |
| 43. | | 50 | விட்டமநாய்க்கன்பட்டி |
| 44. | | 70 | வேட்டாம்பாடி |
| 45. | | 51 | நாமக்கல் குரூப் |
| 46. | | 68 | வகுரம்பட்டி |
| 47. | | 67 | கொண்டிசெட்டிபட்டி |
| 48. | | 66 | பெரியப்பட்டி |
| 49. | | 78 | வசந்தபுரம் |
| 50. | | 52 | முதலைப்பட்டி |

| | | | |
|---|---|---|---|
| 51. | | 54 | சிலுவம்பட்டி |
| 52. | | 54 | மாரப்பநாய்க்கன்பட்டி |
| 53. | | 52 | நல்லிபாளையம் |
| 54. | | 52 | அக்ரஹாரம் அய்யம்பாளையம் |
| 55. | | 54 | சிங்கிலிப்பட்டி |
| 56. | நல்லிபாளையம் | 59 | எர்ணாபுரம் |
| 57. | | 53 | தும்மங்குறிச்சி |
| 58. | | 53 | மேலப்பட்டி மேல்முகம் |
| 59. | | 55 | மிட்டா அணியார் |
| 60. | | 55 | ஜோடிகை அணியார் |
| 61. | | 55 | சர்வமான்ய அணியார் |
| 62. | | 40 | காதப்பள்ளி |
| 63. | | 60 | கீரம்பூர் |
| 64. | | 62 | கோனூர் |
| 65. | | 61 | கீழ்சாத்தம்பூர் |
| 66. | | 63 | இராசாம்பாளையம் |
| 67. | | 58 | திண்டமங்கலம் |
| 68. | கீரம்பூர் | 58 | பெரியகவுண்டம்பாளையம் |
| 69. | | 58 | தி.நல்லாகவுண்டம்பாளையம் |
| 70. | | 57 | நரவலூர் அக்ரஹாரம் |
| 71. | | 57 | நரவலூர் தொட்டிபாளையம் |
| 72. | | 59 | ரங்கப்பநாய்க்கன்பாளையம் |
| 73. | | 65 | வள்ளிபுரம் |
| 74. | | 56 | தளிகை |

இரா. வெங்கடேசன்,
அரசு செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர். 20.4.15.
20/4/15